**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பெருந்துறை**

**அசல் வழக்கு எண்.132/2015** **18.08.2025**

**பெயர்: சக்திவேல்**

**வா.சா.1 – 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**வா.சா.1 சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

1. வா.சா.ஆ.10 புகைப்படம் என்னால் எடுக்கப்பட்டது . புகைப்படத்தில் நீல நிற ஜன்னல் கொண்ட வீடு 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வீடு சிமெண்ட் சீட் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான் . மேற்படி வீட்டிற்கு மேற்புறமாக உள்ள தார்சு வீடு என்னுடைய வீடு என்றால் சரிதான் . 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சிமெண்ட் சீட் வீடு லட்சுமி என்பவர் தான செட்டில்மெண்ட் மூலம் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீடு என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது . லட்சுமி என்பவர் சிவகாமியின் மாமியார் என்றால் சரிதான். சிமெண்ட் சீட் வீட்டிற்கு வடபுறமாக தடம் உள்ளது என்றால் சரிதான் . மேற்படி தடத்தினை பயன்படுத்தி நான் எனது வீட்டிற்கு சென்று வருகிறேன் என்றால் சரிதான் . வா..சா.ஆ.10 புகைப்படத்தில் தடத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள கார் என்னுடையது என்றால் சரியல்ல . 2ம் பிரதிவாதிக்கு வடபுறம் உள்ள தடத்தில் நான் சென்று வருவதை பிரதிவாதி இடையூறு செய்யவில்லை என்றால் சரியல்ல . 2ம் பிரதிவாதியின் வீட்டிற்கு கிழபுறமாக உள்ள இடம் அங்கன் வாடி பள்ளிக்கூடத்திற்கு பாத்தியப்பட்ட இடம் என்றால் சரிதான்.

2. நான் எனது தாவாவில் 2ம் பிரதிவாதியின் வீட்டை ஆக்கிரமிக்க வேண்டி சொத்து விவரத்தில் தவறாக பள்ளிக்கூட இடத்திற்கு மேற்கு என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல . நான் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட வீட்டினை அபகரிக்க வேண்டி பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் ஆக்கிரமிப்பை அகற்றவும் , அத்துமீறாமல் இருக்க வேண்டியும் வழக்கு

தாக்கல் செய்துள்ளேன். நான் வழக்கில் ஆக்கிரமிப்பு உள்ளதாகவும் , அதனை அகற்றிதர வேண்டி பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல.

3. ஆணையர் அறிக்கைக்கு நான் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல தெரிவித்துள்ளேன். ஆணையர் அறிக்கையில் பிரதிவாதிகள் எனது இடத்தில் 1.29 சதுரடி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான் . அதிகமாகவும் இருக்கலாம். நான் பிரதிவாதியின் பூமியில் 8.93 சதுரடி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான் . அது தவறானது. ஆணையர் தாவா சொத்தினை அளவீடு செய்யும் போது நான் உடனிருந்தேன் . ஆணையர் தாவா சொத்தை அளந்து அவரது அறிக்கையில் சரியாக ஆக்கிரமிப்பை குறிப்பிட்டுள்ளார் என்றும் நான் அதிகமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் தவறாக உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. 18.07.2015 ம் தேதி பிரதிவாதிகள் வழக்குச் சொத்தில் அத்துமீறி நுழைந்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதியின் வீட்டிற்கு வடபுறம் உள்ள கிழமேல் தடத்தினை நான் உபயோகிப்பதற்கு பிரதிவாதிகள் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல . அவர்கள் தடத்தில் வாசல் வைத்துள்ளார்கள். தடத்தில் பிரதிவாதிகள் வாசல் வைத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல . நான் கோரியுள்ள பரிகாரமானது ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தவுடன் முற்றுப்பெற்றுவிட்டது என்றாலும் , இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல . பிரதிவாதிகள் எனக்கு எவ்வித இடையூறும் செய்யாத நிலையில் அவர்களுக்கெதிராக கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல . 18.07.2015 அன்று பிரதிவாதிகள் தாவா சொத்தில் அத்துமீறி நுழைந்தது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகம் இல்லை . பிரதிவாதிகள் இடையூறு செய்யவில்லை என்றாலும் அதனால் தான் நான் புகார் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல . நான் 2 ம் பிரதிவாதியின் பூமியை அபகரிக்க வேண்டி உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான சங்கதிகளுடன் வழக்கினை

**தாக்கல் செய்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான் தாக்கல் செய்த வழக்கில் எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோரமல் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல , என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு , சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு , சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, பெருந்துறை,